# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 60/2023 நாள்.19.8.2025

DW2- திரு பிலிப் அருள்ராஜ், த /பெ. திரு.மைக்கேல் ராஜ்

2ஆம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி பிரதிவாதிகளை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் இடம் விற்பனை முன்பாக 7, 8 வருடமாக தெரியும். தாவா சொத்திற்கு அருகில் எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்து உள்ளது என்று சொல்லியுள்ளேனே தாவா சொத்து எது என்றால் 3000 சதுரஅடி நான் தண்டபாணிக்கு விற்பனை செய்தது. என்ன விலைக்கு விற்றேன் என்றால் 8லட்சம். எந்த ஆண்டு என்றால் ஞாபகமில்லை. நெடுமாறன், முருகானந்தம், ரியாஸ் ஆகியோர் தாவா சொத்தை பார்த்தாக சொல்லியுள்ளேனே எந்த தேதி என்றால் தேதி ஞாபகமில்லை. அப்போது அங்கு யார்யார் இருந்தார்கள் என்றால் தண்டபாணியும் நால்வரும் வந்தார்கள். அவர்கள் வந்தபோது நான் எவ்வளவு தூரத்தில் இருந்தேன் என்றால் என்னிடம்தான் அவர்கள் வந்தார்கள். அவ்வாறு பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள், வாதி என்னிடம் வந்ததாக சொல்லவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தை கூடுதல் கிரய தொகையாக பேசியதாக சொல்லியுள்ளேனே அது என்ன என்றால் 40 லட்சம். எப்போது பேசினார்கள் எப்போது பணம் கொடுத்தார்கள் எப்போது பேசினார்கள் என்று தெரியாது, என்னுடைய இடத்தில் வைத்து பணம் கொடுத்தார்கள். என்ன விலை பேசினார்கள் என்றால் தெரியாது. புதுகோட்டை சாலையில் கமலா சுப்ரமணியம் பள்ளிக்கு எதிர்பக்கம் உள்ள உள்ரோட்டில் உள்ள இடம் என்றால் ஆமாம். சதுரஅடி தற்போது 10000லிருந்து 12000 போகும் என்றால் 6 லிருந்து 7 வரை போகும். அங்கிருந்த என்னுடைய இடம் தற்போது உள்ளதா என்றால் விற்றுவிட்டேன். எப்போது விற்றேன் என்றால் வருடம் தெரியாது. என்ன விலைக்கு விற்றேன் என்றால் தெரியாது. ஞாபகமில்லை. அடுத்தவர் சொத்து விற்றது ஞாபகம் உள்ளது என்னுடைய சொத்து விற்றது ஞாபகமில்லையா என்றால் ஞாபகமில்லை. 40 லட்சத்தை யார்யார் எவ்வளவு என்றால் நெடுமாறன் கையால்தான் 40 லட்சம் கொடுத்தார். அதை தண்டபாணி எண்ணிவிட்டு இருப்பதாக சொன்னார். எந்த தேதியில் பவர் கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. கிரய பத்திரம் பற்றி பேசி தண்டபாணி

கேட்டார் அதற்கு அவர்கள் உடனே வாங்கி விற்கபோவதாக சொன்னார்கள் அதனால் பவர் கொடுத்தார். நான் பிரமாண வாக்குமூலத்தில் நெடுமாறன், ஐயப்பன், முருகானந்தம், ரியாஸ் ஆகிய நால்வரும் சேர்ந்து பணம் கொடுத்ததாக சொன்னது தவறு என்றால் நாலுபேரும் நெடுமாறனிடம் கொடுத்து அவர் கையால் தண்டபாணியிடம் கொடுத்தார். எந்த தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதபட்டது என்றால் தேதி தெரியாது நேரம் தெரியாது. யார் கையெழுத்து போட்டார் என்று தெரியுமா என்றால் முதலில் தண்டபாணி கையெழுத்து போட்டார். அதன்பிறகு நெடுமாறன், முருகானந்தம், ஐயப்பன், ரியாஸ் போட்டார்கள். சுமார் எவ்வளவு மணிநேரம் நடந்தது என்றால் ஒரு மணிநேரம் நடந்தது . எந்த அலுவலகத்தில் நடந்தது என்றால் சிவகங்கை பூங்கா அலுவலகத்தில் நடந்தது. மேற்படி விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும், நெடுமாறன் அழைத்தால் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் அவர் நடந்தததை சொல்லசொன்னார் அதனால் வந்தேன். எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றும் வழக்கு விபரங்கள் தெரியாது என்றும் நெடுமாறன் கேட்டு கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.